


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், எச்ஐவி - காசநோய் தாக்கியவர்களுக்கு தினமும் கூட்டு மருந்து சிகிட்சை வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (19.01.2017) துவக்கி வைத்து, கூட்டு மருந்து சிகிட்சை அட்டைகளை வெளியிட ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. ஜி.ரவீந்திரன் மற்றும் இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு. வசந்தி ஆகியோர்கள் பெற்றுக்கொண்டனர்.

செ.வெ.எண்: 49/2017 நாள்: 19.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், எச்ஐவி - காசநோய் தாக்கியவர்களுக்கு தினமும் கூட்டு மருந்து சிகிட்சை வழங்கும் திட்டத்தினை இன்று (19.01.2017) துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், எச்ஐவி - காசநோய் பாதிப்படைந்த நோயாளிகளுக்கு தினசரி கூட்டு மருந்து சிகிட்சை வழங்கும் திட்டம் மற்றும் 99 டாட்ஸ் எனப்படும் ஆன்லைன் கண்காணிப்பு முறையினை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (19.01.2017) துவக்கி வைத்தார்.

பின்னர் கூட்டு மருந்து சிகிட்சை அட்டைகளை (FDC-Fixed Dose Combination) வெளியிட ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. ஜி.ரவீந்திரன் மற்றும் இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு. வசந்தி ஆகியோர்கள் பெற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் கடந்த 2016-ஆம் ஆண்டு வரை 2,613 பேருக்கு எச்ஐவி பாதிப்பு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் 2016ஆம் ஆண்டு மட்டும் 36 பேருக்கு எச்ஐவி தொற்றுடன் காசநோயும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எச்ஐவி தொற்று பாதிப்பு இருப்பவர்களுக்கு வாழ்நாளில் காசநோய் வருவதற்கான வாய்ப்பு 60 சதவிகிதம் உள்ளது. பொதுவாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காசநோயின் தாக்கம் அதிகமாக உள்ளதால், இவர்களுக்கு கூட்டுமருந்து சிகிட்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் வாரத்தின் மூன்று நாட்கள் என்ற அடிப்படையில் மருந்துகள் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது கூட்டு மருந்து சிகிட்சை (FDC-Fixed Dose Combination) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் எச்ஐவி-காசநோய் பாதிப்பு உள்ளவருக்கு 28 நாட்களுக்கு ஒருமுறை மருந்து மாத்திரைகள் மொத்தமாக வழங்கப்படும். இந்த மாத்திரையை மருத்துவரின் பரிந்துரைப்படி வேளை தவறாமல் தினசரி உட்கொள்ள வேண்டும். மாத்திரை அட்டையில் உள்ள மாத்திரையை பிரித்து எடுக்கும்போது அட்டையிலுள்ள இலவச தொலைபேசி எண்ணை சம்மந்தப்பட்ட நோயாளி தொடர்புகொள்ள வேண்டும். ஒவ்வொரு நாள் மாத்திரை உட்கொள்ளும்போதும் வெவ்வேறு இலவச செல்போன் எண் இருக்கும் அந்த எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுக்க வேண்டும். அதன் மூலம், சம்மந்தப்பட்ட நோயாளி அந்த மருந்தை உட்கொண்டு விட்டதாக கருதப்படும். செல்போன் எண்ணை தொடர்பு கொள்ளாவிட்டால் சம்மந்தப்பட்ட நோயாளியை ஆன்லைன் மூலம் கண்காணித்து அந்தந்த பகுதியை சேர்ந்த களப்பணியாளர்கள் தொடர்பு கொண்டு உடனடியாக மருந்தை உட்கொள்ளுமாறு வலியுறுத்துவார்கள்.

மேலும் நோயாளிகளின் சிகிட்சை முறை ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்படுவதால் அனைத்து மாத்திரைகளும் உட்கொள்வது கண்காணிக்கப்படுகிறது, இந்த முறைக்கு 99 டாட்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை துணை இயக்குநர் மரு. மதுசூதனன், அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஜெ. கிளாரான்ஸ்டேவி, காசநோய் தடுப்புத் திட்ட துணை இயக்குநர் மரு. வி.பி.துரை, தொழுநோய் ஒழிப்புத் திட்ட துணை இயக்குநர் மரு. கிரிஜா, எச்ஐவி தடுப்புத் திட்ட மாவட்ட மேலாளர் மரு. ஸ்டெல்லா ஜெனட், காசநோய் ஒருங்கிணைப்பாளர் திரு. குமார் மற்றும் அரசு மருத்துவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.